# திருமலைத்தீபம்

**Thirumalaitheepam**

தீபம் – 92 சித்திரை – ஆனி 2025 இல. 297, கடற்படைத்தள வீதி, திருகோணமலை Email: theepamlink@gmail.com TP: 026 222 1022/ 026 205 4362 Rs. 60/=

## கத்தோலிக்க திருஅவையின் 267 ஆவது திருத்தந்தையான பதினான்காம் லியோ அவர்களை வரவேற்கின்றோம்.




## பரிசுத்த திருஅவையைத் தலைமையேற்று வழிநடத்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் நித்திய இளைப்பாற்றிக்காக மன்றாடுவோம்.



## குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட அருட்பணி. சகாயதாசன் விமல்ராஜ் அமதி



இறைவனில் இணைந்து இறைமக்களுக்கு பணியாற்ற தன்னை குருவாக அர்ப்பணித்திருக்கும் அருட்பணி. சகாயதாசன் விமல்ராஜ் அமதி அவர்கள் திருகோணமலை பாலையூற்று புனித லூர்து அன்னை திருத்தல பங்கைச் சேர்ந்த திரு. திருமதி அந்தோனிப்பிள்ளை சகாயதாசன், சகாயதாசன் சகாயமேரி தம்பதிகளின் மகனாவார்.

அடிகளார் அவர்கள் வைகாசி மாதம் 03ஆம் திகதி 2025ஆம் ஆண்டு புனித மரியாள் பேராலயத்தில் ஆயர் பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையினால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவர் ஏற்றுக்கொண்ட இவரது பணிவாழ்வு இறைவனுக்கு கீழ்ப்படிவு உள்ளதாகவும், மக்களுக்கு தன்னலமற்ற சேவையாகவும் அமைய இறைவன் தாமே இவருடன் இருந்து வழிநடத்துவாராக.





## அமரர் அருட்பணி. நிதிதாசன் அடிகளாரின் 3ஆம் ஆண்டு நினைவு



அன்புவழிபுரம் புனித சதாசகாய அன்னை ஆலயத்தின் முன்னாள் பங்குத்தந்தை அமரர் அருட்பணி. நிதிதாசன் அடிகளாரின் மூன்றாம் ஆண்டு நினைவுத் திருப்பலியானது 01.03.2025 அன்று பங்குத்தந்தையினால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத்திருப்பலியில் மறைமாவட்ட குருக்கள், அருட்சகோதரிகள் மற்றும் பங்கு மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. திருப்பலியைத் தொடர்ந்து அமரர் அருட்பணி. நிதிதாசன் அடிகளாரின் நினைவாக பங்கில் இரத்ததான முகாம் அமைக்கப்பட்டு இரத்த தானமும் வழங்கப்பட்டது.



## பத்திரிகை ஆசிரியரின் பேனா...



ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்புவிழா வாழ்த்துக்களை அனைவருக்கும் முதற்கண் தெரிவித்து நிற்கின்றோம். அன்னை மரியாவின் வணக்க மாதத்திலே ஆலயங்களிலும், வீடுகளிலும், அன்பியங்களிலும் அன்னையின் திருச்செபமாலை செபித்து இந்த மாதம் முழுவதும் நாம் ஆன்மீகத்தில் வளர திருஅவை எங்களை வழிநடத்துகின்றது. அன்னை மரியாளின் பரிந்துரையோடும், தூய ஆவியானவரின் வழிகாட்டலிலும் உந்தப்பட்டவர்களாய் 133 கருதினால்கள் அமெரிக்கரான பேரருட்திரு ராபர்ட் பிரான்சிஸ் ப்ரவோஸ்ட் அவர்களை திருத்தந்தையாக தெரிவு செய்திருக்கின்றார்கள். உலக வரலாற்றிலே முதல் தடவையாக ஒரு அமெரிக்கர் திருத்தந்தையாக தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். தெரிவு செய்யப்பட்ட திருத்தந்தை தனது பெயரை 14ஆம் லியோ என்று பெயர்மாற்றம் செய்திருக்கின்றார்.

அமெரிக்க தேசமானது நீண்ட விரிந்த ஐம்பது மாகாணங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது. இந்நாட்டிலே பலவிதமான கத்தோலிக்க விசுவாசத்திற்கு முரண்பாடான விடயங்கள் நடந்தேறிக் கொண்டு இருக்கின்றன. கடந்தகால திருத்தந்தையர்கள் அமெரிக்க தேசத்தை தரிசித்தாலும்கூட அமெரிக்கர்களின் செய்முறைகளும் கடைப்பாடும் சரி என்று ஒரு போதும் சொன்னது கிடையாது. மாறாக அனைத்து திருத்தந்தையர்களும் கத்தோலிக்க கோட்பாடுகளையும் விழுமியங்களையும் மாத்திரமே கடைப்பிடிக்க வேண்டும் என்று நற்செய்தியை எடுத்துரைத்தார்கள். ஆனால் அமெரிக்கரான புதிய திருத்தந்தை 14ஆம் லியோ அவர்கள் சந்திக்க வேண்டிய சமகால சவால்கள் நிறையவே இருக்கின்றன. எனவே விசுவாசிகளாகிய நாம் திருத்தந்தைக்காக அவர் எடுக்க வேண்டிய முற்போக்கு சிந்தனைகளுக்காக அதிகமாகவே செபிப்போம்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும் தேசிய மக்கள் சக்தியே அறுதிப்பெரும்பான்மையைப் பெற்றிருக்கின்றது. இந்த பெறுபேறுகளை நோக்கும் போது இதுவரை காலமும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் பெறுபேறுகளில் கடைநிலவரத்தில் இருந்தவர்கள் பாரிய முன்னேற்றத்தை கண்டிருக்கின்றார்கள். நகர சபைகளும், பிரதேச சபைகளும், உள்ளூராட்சி மன்றங்களும் அதன் உறுப்பினர்களுமே களத்தில் மக்களோடு மக்களாக, மக்களின் தேவைகளுக்காக சேவையாற்று கின்றவர்களாகவும், களநிலவரத்தை அறிந்தவர்களாகவும் அவற்றைப் பூர்த்தி செய்ய விண்ணப்பித்து அவை அமுலாகும் மட்டும் போராடுகின்றவர்களாகவும் நாம் பார்க்கின்றோம்.

எனவே, புதியவர்களுக்கு இடம் விட்டு அவர்களை உற்சாகப் படுத்துவதோடு பழையவர்கள் தங்கள் சுயலாபங்களை விட்டுவிட்டு ஊருக்கு நல்லவைகள், அத்தியவசியமானவைகள் நிறைவேற்றப்பட ஒத்துழைப்பது தான் தார்மீகப் பொறுப்பாகும். நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் புதிய தலைமைத்துவங்களுக்காகவும், அத்தோடு எங்கள் ஆன்மீக புதிய நலனுக்காகவும் தொடர்ந்து செபிப்போம்.

**அடுத்த இதழில் சந்திக்கும் வரை**

**அருட்பணி. அ.அ. றொஹான் பேணார்ட்**
**ஆசிரியர்**
**திருமலைத்தீபம்**

## இந்தியா தஞ்சாவூர் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. லூர்து ஆனந்தன் அவர்களோடு ஓர் நேர்காணல்



நடந்து முடிந்த கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவிற்கு திருப்பலியை ஒப்புக்கொடுக்க இந்தியா தஞ்சாவூர் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. லூர்து ஆனந்தன் அவர்களோடு இடம் பெற்ற நேர்காணல். நேர்காணல் கண்டவர் மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்பணி. றொஹான் பேணார்ட் அடிகளார்.

கேள்வி 1 -: திருமலைத்தீபம் பத்திரிகை சார்பாக வணக்கங்களையும், வரவேற்பையும் தெரிவித்துக் கொண்டு வினவுகின்றேன். இலங்கைக்கு வருகை தந்ததற்கான நோக்கம் என்ன?

பதில் -: கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா திருப்பலியை ஒப்புக்கொடுக்க. யாழ்ப்பாண மறைமாவட்டத்தால் அழைக்கப்பட்டிருந்தேன்.

கேள்வி 2 -: இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்பிற்குள் (Sea of Srilanka) வந்து பெரிய ரோலர் படகுகளைப் பயன்படுத்தி நவீன முறைப்படி மீன்களை அள்ளிச்செல்கிறார்களே இது குறித்து தங்களின் கருத்து என்ன?

பதில் -: உண்மையில் இந்திய மீனவர்களின் தொகை அதிகமாய் இருப்பதால் இந்தியக் கடற்பரப்பிற்குள் மீன்கள் இல்லாத காரணத்தினால் அந்தக் கடற்தொழிலாளர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள்ளே வந்து மீன்களைப் பிடிக்கின்றார்கள். இலங்கை அரசாங்கம் இவர்கள் ஒரு சிலரை சுடுகின்றார்கள், ஏனையோரை கைது செய்கின்றார்கள். அவர்களது படகுகளையும் தங்கள் கைவசப்படுத்துகிறார்கள். என்னைப் பொறுத்த மட்டில் இப்படியாக அத்துமீறி வருபவர்களை கண்டித்து அனுப்புவதுதான் நல்லதாக இருக்கும். இந்த விடயத்தை மனிதாபிமான அடிப்படையில் இந்திய - இலங்கை அரசுகள் கையாள்வதே சிறந்தாகும்.

கேள்வி 3 -: தாங்கள் மதுரை ஆனந்த் என்கின்ற பெயரில் “நம் வாழ்வு” சஞ்சிகையின் ஆசிரியராக இருந்த காலத்தில் ஒரு வரவேற்பு மிக்க சஞ்சிகையாகவும் இன, மத பேதமின்றி அனைவரும் சஞ்சிகையை வாங்கிப் படித்தார்களே அப்படி என்ன புதிய யுக்தியை தாங்கள் கையாண்டீர்கள்?

பதில் -: அதற்கான முதற்காரணம் சஞ்சிகையில் வெளிவந்த தலைப்புக்கள் அத்தோடு சமயம் சார்ந்ததாக மாத்திரம் அல்லாமல் அரசியலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக எழுதப்பட்ட விடயங்களுமே ஆகும்.

கேள்வி 4 -: தங்களுடைய காலகட்டத்தில் “நம் வாழ்வு” சஞ்சிகை மறைந்த தமிழ்நாட்டு முதல்வர் அமரர் கலைஞர் கருணாநிதி அவர்களை வெளிப்படையாகவே ஆதரித்து கட்டுரைகள் எழுதப்பட்டிருந்தது இதற்கான காரணம் என்ன?

பதில் -: அமரர் கலைஞர் கருணாநிதி அவர்கள் மதபேதமின்றி ஆட்சி நடத்தியதும் எங்களுக்காக முழு சுதந்திரம் தந்தமையே காரணமாகும்.

கேள்வி 5 -: மாதா தொலைக்காட்சி தற்போது பிரபல்யம் அடைந்து வருகிறது. உலகம் முழுவதும் இருக்கக் கூடிய தமிழ் மக்கள் பார்வையிடுகின்றார்களே தங்கள் கருத்து என்ன?

பதில் -: மாதா தொலைக்காட்சி தமிழ் நாட்டு ஆயர்கள் பேரவையால் நடாத்தப்பட்டு வருகிறது. தற்போது மக்களிடம் இருந்தும் பண உதவி கிடைக்கின்றது. மேலும் ஏனைய மத தொலைக்காட்சிகள் போல அல்லாமல் வித்தியாசம் வித்தியாசமான நிகழ்ச்சிகளை தயாரித்து ஒளிபரப்புவதும் ஒரு காரணமாகும்.

இந்த குறுகிய காலத்திற்குள் எங்களுடைய மறைமாவட்டத்தை தரிசித்தது மாத்திரம் அல்லாமல் இந்த நேர்காணலில் பங்கு பற்றியமைக்கும் எங்களுடைய திருமலைத்தீபம் பத்திரிகை ஊடாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தங்களுடைய பணி சிறக்க இறைவன் தங்களுக்கு உடல், உள ஆரோக்கியத்தையும், நல்லாசிகளையும் பொழிய வேண்டுமென்று மன்றாடி விடைபெறுகின்றேன். நன்றி



அன்புவழிபுரம் புனித சதாசகாய அன்னை ஆலயத்தில் 09.02.2025 அன்று மறைபரப்பு ஞாயிறு தினத்தை திருப்பாலத்து சபை மாணவர்களும், ஊக்குவிப்பாளர்களும் இணைந்து சிறப்பித்தனர். திருப்பலியின் பின் மறைக்கல்வி மாணவர்களுள் தெரிவு செய்யப்பட்ட மாணவத் தலைவர்கள் மற்றும் வகுப்புத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் மாணவர்களால் உறுதி மொழி கூறப்பட்டு பங்குத்தந்தையின் தலைமையில் மறையாசிரியரின் ஆயத்தத்துடன் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் மறையாசிரியர்களும் இவ் வருடத்திற்கான உறுதிமொழியினை எடுத்துக் கொண்டனர்.

குரவி ஒன்று அங்கும் இங்கும் பறந்து இரை தேடிக் கொண்டிருந்தது, காற்று சற்று வேகமாக வீசிக் கொண்டிருந்ததால் அந்தக் குருவியால் எளிதாகப் பறக்க முடியவில்லை.

**இறையாசீருடன்**

**அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா**

## இன்னுமா தயக்கம் 36



ஒவ்வொரு முறையும் காற்று வீசும் போது சிரமப்பட்டு காற்றின் எதிர்த்திசையில் பறந்து தனது இலக்கான இரையைப் பிடித்தது. அப்போது காற்றோடு பறந்து வந்த ஒரு சருகு அந்தக் குருவியிடம், "நானும் பறக்கின்றேன், நீயும் பறக்கின்றாய், ஆனால் நீ மிகவும் கஷ்டப்பட்டு பறக்கின்றாய், நானோ எவ்வளவு எளிதாக பறக்கின்றேன் பார்த்தாயா! நீயும் காற்றின் திசையிலேயே என்னைப் போன்று பறந்தால் உனக்கு கஷ்டமில்லை அல்லவா?" என்றது. அதற்கு அந்தக் குருவி, "உனக்கு உயிருமில்லை, இலக்குமில்லை, எனவே காற்று அடித்துச் செல்லும் திசையில் பறக்கிறாய். எனக்கு உயிர் உண்டு அந்த உயிருக்கான இலக்குகளும் உண்டு. எனவே நான் எனது இலக்கை நோக்கி மட்டுமே பறக்கின்றேன். காற்று நின்றவுடன் உன்னை அள்ளி குப்பையில் போட்டு எரித்துவிடுவார்கள். ஆனால் காற்று நின்றாலும் தொடர்ந்து பறந்து கொண்டே இருப்பேன். ஏனெனில் எனக்கு உயிர் உண்டு, உயிருக்கான இலக்கும் உண்டு!" என்று கூறியதாம்.

உண்மையில் கடவுள் நம் வாழ்வில் செயல்படுகின்றார். ஆனால் நம் சுதந்திரத்திற்கு அப்பாற்பட்டு அல்ல. அவர் நம் வாழ்வில் செயல்பட்டாலும் நமது முடிவுகள் தான் நம் வாழ்வில் நடக்கின்றன. கடவுள் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை நமக்கு வெளிப்படுத்துகின்றாரே தவிர நம் வாழ்வில் விடாப்பிடியாக தன் திட்டத்தை செயல்படுத்துவதில்லை.

அன்னை மரியாளுக்கு மங்கள வார்த்தை சொன்ன அதிதூதர் அன்னை மரியாவின் ஒப்புதலுக்காக காத்திருக்கின்றார்; ஆண்டவர் இயேசுவை பாடுகளுக்கு தயாரித்த இறைவன் அவரது ஒப்புதலுக்காக காத்திருக்கின்றார் ;



கிறிஸ்தவர்களை துப்புறுத்திய சவுலை சந்தித்த இறைவன் சவுல் பவுலாக மாறும் மனநிலைக்காக காத்திருக்கின்றார். இவ்வாறு ஒவ்வொருவரது முடிவுக்காகவும் கடவுள் காத்திருக்கின்றார். கடவுளின் திருவுளத்தை முன்னிட்டு தங்கள் வாழ்க்கையில் சவால்களைச் சந்தித்து வெற்றி பெற்றவர்களையே நாம் புனிதர்கள் என்று புகழ்கின்றோம்.

# உயரப் பறக்கின்றேன்: நான் சருகா, குருவியா?

"நம் வாழ்வை நாம் தீர்மானிப்பதில்லை, கடவுள் ஏற்கனவே தீர்மானித்து விட்டார்" என்ற கிறிஸ்தவ கொள்கையை நாம் நம்புகின்றோம். இது சற்று குழப்பமான கொள்கையாகும். கடவுள் என் வாழ்வைத் தீர்மானித்துவிட்டார் என்றால் இந்த வாழ்வில் எனக்கு எந்த பொறுப்புமில்லை. நான் செய்யும் தவறுகளுக்கு நான் பொறுப்பேற்க முடியாது, காரணம் இது கடவுளால் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் நம் வெற்றியோ தவறுகளோ நம் பொறுப்பில் தான் விடப்படுகின்றன. கடவுள் என் வாழ்வைத் தீர்மானித்து விட்டால், என் வெற்றிக்கு நான் எப்படி பரிசு பெற முடியும், என் பாவங்களுக்கு நான் தண்டனை பெற வேண்டும்? இது எப்படி நியாயமாகும்?

நம் வாழ்விற்காக பல திட்டங்களை வகுத்துள்ள இறைவன் அந்த திட்டங்களுக்கான மனத்தெளிவையும் வாழ்வியல் வசதிகளையும் நமக்கு தருகின்றார். ஆனால் அவற்றை நம் வாழ்வில் நிறைவேற்றுவது நமது கடமையும் பொறுப்புமாகும். இந்த மனத்தெளிவு, வசதி வாய்ப்புகள் நம் சவால்களைச் சந்திக்க இறைவன் கொடுத்துள்ள சக்திகளாகும். அந்த சக்திகளை நாம் பயன்படுத்தி இலக்குகளை சென்றடைந்தால் நம் வாழ்வின் உயர்வை நாம் அடைகின்றோம். ஆனால் சவால்களைச் சந்திக்க துணிவில்லாமல் அவற்றிற்கு நாம் இரையாகிவிடும் போது சருகைப் போல அர்த்தமில்லாமல் நம் வாழ்வை முடித்துக் கொள்கின்றோம். இறைவன் கொடுத்துள்ள இலக்கை அடைவதே நமது உயர்வு.

## படித்ததில் பிடித்தது

சேவியர் அந்தோனி சே.ச



## தோற்றப் பிழை

மாலை மங்கி இருள் சூழும் நேரம்.
மாட்டு வண்டிப் பாதை.

மாமனும் மச்சானும் சவடாலாகப் பேசிக் கொண்டே நடந்தார்கள்.

திடிரென அலறினான் மாமன்:
'ஐயோ மச்சான் அங்கே பாரு!
எவ்வளவு பெரிய பாம்பு...
நடுரோட்டுல!'

வெலவெலத்து நின்றான் மச்சான்:
'ஆமா மாமா...
நடுரோட்டுல கெடக்கு.
தவளைய முழுங்கியிருக்கும்; எவ்வளவு பெரிசு!
கல்லைத் தூக்கிப் போடவா?'

தடுத்தான் மாமன்:
'அட பொச கெட்ட மச்சான்!
குறி தவறிப் பட்டு ஓடிப் போச்சுன்னா...
உன்ன வீடு தேடி வந்து பழி வாங்கும். தெரியாதா?
அப்பறம் என்னோட அக்கா கதி என்னாவறது?
பின்ன என்ன தான் செய்யிறது மாமு?

அருகே கை காட்டினான்:
'மச்சான்...
அங்கே பாரு ஒரு பெரிய தடி.
அத எடுத்து பாம்போட மண்டையப் பார்த்து...
ஒரே போடா போடு. ம்.. சீக்கிரம்!'

போருக்குத் தயாரானான் மச்சான்.
வேகமாய் வேட்டியை வரிந்து கட்டிக் கொண்டான்.
மெல்ல மெல்ல நகர்ந்து தடியைக் கையில் எடுத்தான்.

எடுத்த வேகத்தில் பாம்பின் தலையில்
ஒரே போடு! போட்டுவிட்டான்.

போட்ட வேகத்தில் அலறினான்:
'ஐயய்யோ...
மோசம் போயிட்டோம் மாமு!
ரோட்டுல கெடந்தது தான் தடி.
நான் கையில எடுத்தது தான் பாம்பு!'

**கண்டு உணர்வதே மெய்.**
**காண்பதெல்லாம் மெய் என்றால்**
**கானல் நீரும் மெய்யே!**


**உண்மை இதுதான்:**
**உண்மையை எளிதாய்**
**உணர்ந்துவிட முடியாது!**

## தடங்கலுக்கு மகிழ்கின்றோம்

# நில்–நிதானி–முன்னேறு

நிகழ்வு:

யானைகளை கண்டி தலதா மாளிகை பெரஹர நிகழ்விற்கு கொண்டுவரும் வழக்கம் உண்டு. பெரிய குருமட பயிற்சிக் காலங்களில் முதல் முறையாக அதிக அளவில் யானைகளை அருகருகே காணக்கிடைத்த ஆனந்தம் வார்த்தைகளில் விபரிக்க முடியாதது. அத்துடன் வியப்பில் ஆழ்த்திய காட்சி என்னை சிந்திக்கத் தூண்டியது. பெரிய யானைகளை சிறிய அளவுகளினாலான மரக்கட்டையிலும் குட்டி யானைகளை பாரமான சங்கிலிகளால் கட்டி, காலில் பாரிய இரும்பு வளையங்களால் கட்டியிருப்பதைக் கண்டேன். ஏதோ தவறு நடந்துவிட்டதோ என எண்ணி, யானைகளை பராமரிப்பவர்களை வினவினேன். யானைகள்



குட்டியாக இளமையில் இருக்கும் பொழுதே, பாரமான சங்கிலியால் கட்டி, பாரமான வளையங்களால் கால்களை இணைப்பதற்கான காரணம் என்னவென்றால் இளமையில் இருக்கும் பொழுதே, சங்கிலியின் கட்டில் இருந்து விடுதலை பெற எடுக்கும் ஒவ்வொரு முறையும் வலியும், வேதனையும் அனுபவிக்கும். ஆனால் விடுவித்துக்கொள்ள முடியாது என்னும் பெறுபேறே அறுதியாகும் என்னும் மனநிலை பசுமரத்தாணிபோல் பதிந்து விடுகின்றது. எனவே அவை தம் முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகின்றது. “என்னால் முடியாது” “இந்த நிலை மாறாது” “நான் ஒரு அடிமை” என்னும் மனப்பாங்குடன் வளருகின்றது என அந்த நபர் விளக்கமளித்தார்.

வாழ்க்கைக்கு:


பெரிய யானைகளால் அந்த சிறிய மரக்கட்டையின் கட்டிலிருந்து விடுபடாமைக்கு காரணம் என்ன? சிறிய மரக்கட்டையா? அல்லது சிறுமையான மனநிலையா? இதுபோலதான் ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கை அனுபவங்களிலும் சில வகையான பயங்கள் மிக ஆழமாக குடிக்கொள்கின்றன. உளவியளாளர்களின் கருத்துப்படி பொதுவாக பயம் (Fear) என்பது மனிதனில் இயல்பாக தன் உடல், உள ரீதியான ஆபத்திலிருந்து பாதுகாக்க தோன்றும் பதில்மொழி (Response) ஆகும். அடிப்படையில் இவர்கள் ஐந்து வகையில் பயத்தை பகுத்து ஆய்வு செய்கிறார்கள்.

1. **அழிவு அல்லது அனர்த்தம்** - Extinction

இறப்பின் இறுதிநிலையில் ஏற்படும் அங்கலாய்ப்பு, வாழ்வது இனி சாத்தியமில்லை என்னும் நிலைப்பாடு. இந்த அனுபவம் மிக உயரமான கட்டிடத்தின் விளிம்பில் நின்று கீழே செங்குத்தாக பார்க்கும் போது வரும் நிலையாகும்

2. **சிதைத்தல்** - Mutilation

இது உடலுறுப்புகளில் ஒரு பாகத்தையோ அல்லது அதன் செயல்பாட்டையோ இழக்கும் நிலையை மையமாகக் கொண்டு வரும் திகில் நிலையாகும். உதாரணமாக பாம்பு, சிலந்தி, தேள் போன்ற உயிரினங்களை கண்டவுடன் ஏற்படும் பயமாகும்



**இளையோர் பக்கம் 03**

**அருட்பணி – ஜீட் ஜோன்சன்**

3. **சுயாட்சி இழப்பு** - Loss of Autonomy

ஒருவர் தன்னிலை முழுவதையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சக்தியை இழக்கின்ற சூழ்நிலைகள் அல்லது அக சக்திகளுக்கு (இயற்கை, மனிதர்) சிறைப்பட்டு, சுயாட்சியை இழக்கும் நிலையை மனதில் எதிர்வுகூறும்போதும் ஏற்படுகின்றது. தொழிலகத்தில் பதவி இழந்து, தரமிறக்கம் செய்யப்படும்போது தம் சக ஊழியர்கள் முன்னிலையிலும், தன் சொந்த குடும்ப அங்கத்தவர் முன்னும் ஏற்படும் சமநிலை தளம்பலைக் குறிக்கும்

4. **பிரிவு** – Separation

இது உறவுகளில் பிரிவுகள் ஏற்படும்போது தோன்றும் கைவிடப்பட்ட நிலை, நிராகரிப்பு போன்ற வடிவில் தோன்றும். ஒரு மனிதப் பிறவியாகக்கூட கருதாத, வேண்டப்படாத நிலைக்கு தள்ளப்படும் போது எழும் பயமாகும். சுமூகமான உறவில் திடீரென மௌனமான முறையில் புறக்கணிக்கப்படும் அனுபவங்களும் இவ்வகைப் பயத்தை பிரதிபலிக்கின்றன.

5. **தன்முனைப்பு இழத்தல்** - Ego Death

அவமானம், வெட்கம், ஏற்றுக் கொள்ளப்படாது உதறித்தள்ளப்பட்ட நிலையை உணரும் பயமாகும். ஒருவரின் சுய ஒருமைப்பாடு இழந்து அன்பு, மதிப்பு போன்ற பண்புகளை பகிரமுடியாத பரிதாப நிலையாகும்.

மேலே குறிப்பிட்ட ஐந்து வகை பயங்களும் ஒவ்வொரு மனிதனிலும் இருப்பதை நாம் அவதானிக்கமுடியும். அதேநேரத்தில், துணிகரமான பல செயல்களில் தம் திறமைகளை நிரூபிக்கும் இளைஞர்களின் சாகச வினைத்திறனையும் பல உருவங்களில் காணமுடிகின்றது. இருசக்கர வண்டியை ஒருசக்கரத்திலும், மூன்று சக்கர வண்டிகளை இரண்டு சக்கரங்களிலும் ஓடி சாகசம் செய்கின்றார்கள். மலை உச்சிகளிலும், ஓடும் இரயிலும் செல்பி எடுத்து துணிச்சல் காட்டுகின்றார்கள். இவை எல்லாம் பயத்தை மேற்கொள்ள முடியும் என்னும் முனைப்பு என்று கூறும் ஒருசாரார், உற்சாகம் மேலோங்கி, தகுந்த பயிற்சியோ, ஆபத்தின் சாத்தியங்களையோ அறியாது, விபத்துகளில் இறக்கும் இளையோரும் இருக்கின்றனர். எனவே, மனிதன் பயத்தை மேலாண்மை செய்வதற்கு துணிவு மட்டும் ஒரு காரணியாக முடியாது. நம் சரியான மனநிலை உருவாக்கம் (Formation of Right Attitude) மிக முக்கியமான காரணியாகும். அடுத்த வெளியீட்டில் இதைப்பற்றி சிந்திப்போம்.

---


**மறைக்கல்வி நடுநிலைய இயக்குனரின் தலைமையில் இந்தியாவில் உள்ள அன்னை வேளாங்கண்ணி ஆலயத்திற்கான புனித யாத்திரை**






புனித மரியாள் பேராலயத்தின் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் மற்றும் பங்குமக்கள் ஏற்பாட்டில் திரு. இருதயநேசன் அவர்களின் தயாரிப்பில் **“தேடும் அன்பு தெய்வம்”** எனும் பாஸ்கா மேடை நாடகம் 11.04.2025 அன்று அரங்கேற்றப்பட்டது.

# எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும்





**அருட்பணி : அ. அ. நவரெத்தினம் (நவாஜி), சிரேஷ்ட் விரிவுரையாளர்**

இயேசு கற்பித்த இறைவேண்டலின் இரண்டாம் பகுதியானது மாந்தர்களின் நடைமுறை வாழ்வும் அவற்றிக்கான தேவைகள் குறித்தும் சிந்திக்க நமக்கு அழைப்புத் தருகிறது.
அதனடிப்படையில், கடவுளின் மாண்பு, அவரது இலக்கு ஆகிய மையங்களைக் குறித்து முதலாம் பாதியில் தியானித்தும், அதன் இரண்டாம் பாதியில் இயேசுவின் இறைவேண்டலானது மனிதர்களின் நடைமுறை தேவைகளின்பால் தமது கவனத்தைச் செலுத்துகிறது.

இவ்வாறான சிந்தனையில், மனிதர்களாகிய நாம் நமது வாழ்வின் பெரிய தேவையாகிய மீட்புக்கு அவரில் தங்கியிருப்பது போன்று, தமது அன்றாட வாழ்வின் தேவையாகிய நாளாந்த உணவிற்கும் அவரிலேயே தங்கியுள்ளோம். இதனை உறுதிசெய்வது போன்று கத்தோலிக்கத் திரு அவையின் மறைக்கல்வி நூல் 'கடவுளே அனைத்து நன்மைத்தனத்தின் ஆதாரமாய் உள்ளார்' என்கிறது (காண்க: க.தி.ம. எண். *2828*) நமது ஆன்மிகத் தேவைகளுக்கு மாத்திரமல்ல, மாறாக, நமது அன்றாடத் தேவைகளுக்கும் அவரே நமது ஆதாரம். 'எங்கள் அன்றாட உணவை எங்களுக்கு தாரும்' என்கிற நான்காவது விண்ணப்பத்தினூடாக இதனை நாம் தெளிவாகப் புரிந்து கொள்கிறோம். ஆயினும் சில வேளைகளில் இம்மன்றாட்டுக்கூட பிழையாகப் புரிந்து கொள்ளப்பட வாய்ப்புள்ளது. சிலர் 'அன்றாட உணவு' என்கிற பதத்தினை ஓர் ஆன்மிக உணவாக மட்டுமே அடையாளம் கண்டுகொண்டு, இயேசுவின் செபத்தின் வெளிப்படையான பொருளினை சிதைத்து விடுகின்றமை கவலை தருகின்ற விடயமாகும். இன்றைய உலகில் அன்றாட உணவிற்காக அல்லலுறுகின்ற மக்கள் கூட்டத்தினர் ஏராளம் உள்ளனர். எனவே இங்கு இயேசுவின் மன்றாட்டு நாளாந்த உணவிற்கான மன்றாட்டேயாகும் என்பதனை மறவாதிருப்போம்.

இங்கே இயேசுவின் நோக்கமெல்லாம் 'நானே வாழ்வுதரும் உயிருள்ள உணவு' என்கிற கருத்தியலை முன்னிலைப்படுத்துவது கிடையாது, மாறாக, நமது நாளாந்த உடல் சார்ந்த வளர்ச்சிக்கு உதவுகின்ற (உணவு) அனைத்திற்கும் நாம் கடவுளில் தங்கியிருக்கின்றோம் என்பதனை முன்னிலைப்படுத்தவே என்பதனை மறக்கக்கூடாது. நாம் நமது அனுதின தேவைகளுக்காக கடவுளில் தங்கியிருக்கின்றோம் என்பது மட்டுமல்ல, மாறாக, அத்தேவைகளுக்காக அவரிடத்தில் மன்றாட வேண்டும் என்றும் அழைக்கப்படுகிறோம். இது நமக்கு நினைவுறுத்துவது யாதெனில் இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் பாரவோனின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று மோசேயால் வழிநடத்தப்பட்டு சீனாய் பாலை நிலத்தில் அலைந்து திரிந்தபோது தங்களது அன்றாட உணவிற்காக பெரிதும் கஷ்டப்பட்ட போது அவர்களுக்கு கற்பிக்கப்பட்டது யாதெனில் அவர்களது நாளாந்த உணவிற்காக கடவுளில் (யாவே) தங்கியிருக்க வேண்டுமென்பதாகும். அவ்வாறு அவர்கள் தங்களது நாளாந்த உணவிற்காக யாவேயில் தங்கியிருந்தபோது அவர்களுக்கு பாலைவெளியில் நாளாந்தம் 'மன்னா' எனும் உணவு பொழியப்பட்டது (விடுதலை:16). இயேசுக்கிறிஸ்து பழைய ஏற்பாட்டின் மனித அனுபவத்தை தனது புதிய உடன்படிக்கையோடு இணைத்து, மாந்தர் அனைவருமே தங்களது உடல்சார் வாழ்விற்கும், நலத்திற்கும் கடவுளில் தங்கியிருக்க வேண்டுமென்பதனை எடுத்துரைக்கின்றார். இயேசுவின் புதிய உடன்படிக்கையின்படி இறைவேண்டலின் இப்பகுதியானது உலகில் வாழ்கின்ற வறியவர்களை நோக்கியதாகும். இச்சொற்தொடரில் 'எங்கள்' என்கிற வார்த்தையானது உலகளாவிய குடும்பத்தினை நமது நினைவிற்கு கொண்டு வருகிறது. இப்பகுதியினை செபிப்பதனூடாக நாம் உலகெங்கும் பரந்து வாழ்கின்ற ஏழைகள், பட்டினியில் இருப்போரை எண்ணி அவர்களுக்காக மன்றாடுவதுடன், நீதிக்கும், பகிர்வுக்குமான செயற்பாட்டில் ஈடுபட அழைக்கப்படுகிறோம் (காண்க: க.தி.ம. எண். *2831*).

இத்தகைய தங்கியிருத்தலானது வெறுமனே உணவுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது அல்ல. இங்கே 'உணவு' என்பது ஒரு குறியீட்டுச் சொல்லாகும். அதன் பொருள் யாதெனில், வாழ்விற்கு எவையெல்லாம் அவசியமோ அவற்றையெல்லாம் குறித்து நிற்கிறது. இன்னும் ஒருபடி மேற்சென்று மறைக்கல்வி நூலானது 'மனிதன் அப்பத்தினால் மட்டும் உயிர் வாழ்வதில்லை' (மத்தேயு *4:4*) என்பதற்கொப்ப இவ்விண்ணப்பம் மனிதனுடைய மேற்குறிப்பிட்ட அனைத்து தேவைகளையும் குறிப்பதுடன், ஆன்மிக ஆதாரமாகிய உண்மையான வாழ்வளிக்கும் உணவாகிய நற்கருணையையும் கோடிட்டு காட்டுகிறது (காண்க: க.தி.ம. எண். *2835*)

இயேசுகிறிஸ்து தமது பெரும் இறைவேண்டலை மாந்தருக்கு தருவதற்கு முன்னதாக விவிலியத்தில் கூறியது நோக்கத்தக்கது. மத்தேயு நற்செய்தியில் அவர் கூறுவது யாதெனில், நமது விண்ணகத் தந்தைக்கு நாம் கேட்பதற்கு முன்னமே நமக்கு என்ன தேவையென்று தெரியும். எனவே நாம் புறவினத்தார் போன்று மன்றாட வேண்டிய தேவை கிடையாது (காண்க: மத்தேயு *6:8*), மாறாக, நாளாந்த உணவிற்காக கடவுளிடத்தில் மன்றாடுங்கள் என்பதாகும். அதுமட்டுமலலாது தேவைகளை கேட்பதற்காகவே செபமே தவிர, மாறாக ஆடம்பரங்களைக் கேட்பதற்காக அல்ல என்பதனை மனதில் இருத்த வேண்டும்.

விவிலிய பேரறிஞர்கள் மத்தியில் 'அன்றாடம்' என்கிற வார்த்தையின் பொருள் குறித்த கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன. இது இன்றைய நாளைக் குறிக்கின்றதா அல்லது இன்றைய நாளுக்கு அடுத்ததைக் குறித்ததா என்பதே அவ்முரண்பாடாகும். ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் அது குறித்து நாம் பெரிதும் பொருட்படுத்தத் தேவையில்லை. நமக்கு அதன் பொருள் என்னவென்றால், நமது உடனடித் தேவையினை பூர்த்தி செய்து கொள்வதேயாகும். உடனடித்தேவை இன்றைய தேவையாக இருக்கலாம் அல்லது அது நாளைய தேவையாகவும்கூட இருக்கலாம். எனவே இயேசுவின் செபத்தின் இப்பகுதியினை மன்றாடுகின்றபோது, நாம் வெறுமனே இன்றைய நாளாந்த தேவைக்காக மட்டும் மன்றாடுவதில்லை, மாறாக, அத்துடன் இணைத்து விண்ணக விருந்தினை நினைவு கூர்ந்து நிலைவாழ்வு தருகின்ற உணவிற்காகவும் மன்றாடுகின்றோம் (காண்க: க.தி.ம. எண். *2837*).

கடவுளில் தங்கியிருத்தல் சரியாக புரிந்து கொள்ளப்படுமாயின் அது நம் ஒவ்வொருவரையும் மாற்றியமைக்கும். ஆயினும் நவீன வாழ்க்கை முறையானது இயேசு கற்பித்த இறைவேண்டலின் பொருளினை சரியாகப் புரிந்துகொள்வதில் சிக்கல் நிலையினைத் தோற்றுவித்துள்ளது. இன்று சிலருக்கு இருக்கின்ற சிக்கல் உண்பதற்கு உணவு இல்லையே என்பது கிடையாது, மாறாக, அதிகமாக உள்ளதென்பதே. அதனாற்தான் பலவிடங்களில் உணவு இன்று வீணாகச் சிந்தப்படுகிறது. ஆயினும் முழு மனித வரலாற்றின் காலகட்டத்திலும், உலகின் பலவிடங்களிலும் பட்டினி, உணவின்மை போன்றமை தலைவிரித்தாடுகின்றது. அப்படிப்பட்ட கிறிஸ்தவ மாந்தருக்கு இச்செபமானது சில நம்பிக்கையின்மையினைத் தோற்றுவிக்கின்றது. அதேவேளையில் நாளாந்தம் உணவு கிடைக்காத, பட்டினியினைச் சந்தித்த அனுபவம் நம்மைப்போன்ற பலருக்கு வாழ்வில் வாய்த்ததில்லை. இந்த விடயத்தில் நாளாந்த உணவிற்காக கடவுளிடம் கண்ணீர்விட்டு அழுது புலம்புகின்ற பல்லாயிரம் மாந்தரின் அழுகுரலுக்கு செவிசாய்க்கின்ற இறைவன் அவர்களுக்கும் ஏதோவொரு விதத்தில் உணவளிக்கின்றார். ஆனால் இத்தகைய நிலைக்கு தள்ளப்படாமல் நாளாந்தம் இறைவனின் பராமரிப்பினால் உணவு உட்கொள்கின்ற நாமனைவரும், பொறுப்பு உணர்ச்சியுடன் அவர்களின் அன்றாடத் தேவைகளுக்காக மன்றாடுவதுடன், அவர்களுக்கு நம்மாலான உதவிகளைப் புரிந்து அவர்களது பசியினைப் போக்கிட முன்வர வேண்டும்.

இதனடிப்படையில் விண்ணக இறைவேண்டலின் இப்பகுதியானது நமக்கு கற்பிப்பது யாதெனில், கடவுளே நமது அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்பவர் அவரில் நம்பிக்கை கொள்வோம். ஏழைகளுடன் நல்லுறவில் இருப்போம். நாம் நம்மிடம் உள்ளவற்றை இல்லாதவரோடு பகிர்ந்து மகிழ்வுறுவோம். ஆண்டவரின் தெய்வீக நற்கருணை விருந்திற்காக ஆவலுடன் காத்திருப்போம். நிலைவாழ்விற்காக எதிர்நோக்கி இருப்போம் என்பதேயாகும். திருப்பாடல் *145: 15 – 16* வார்த்தைகளில்: "எல்லா உயிரினங்களின் கண்களும் உம்மையே நோக்குகின்றன, தக்க வேளையில் நீரே அவற்றிற்கு உணவளிக்கின்றீர். நீர் உமது கையைத் திறந்து எல்லா உயிரினங்களின் விருப்பத்தையும் நிறைவேற்றுகின்றீர்" என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது. ஆம் இறைவன் நமது வானகத் தந்தை, அவர் தமது படைப்புக்கள் அனைத்தின் தேவைகளையும் அன்றாடம் நிறைவுசெய்கின்றார். அவரிடமிருந்து பெறுகின்ற நாமும் 'எங்கள் அன்றாட உணவை எங்களுக்கு இன்று தாரும்' என்று மன்றாடுகின்றபோது, அனைவருக்காகவும் மன்றாடுவோம். அனைவருக்கும், அதிலும் குறிப்பாக இல்லாதவரோடு உள்ளதைப் பகிர்ந்து இறைமகிழ்வில் இணைந்திருப்போம்.

# “எதிர்நோக்கு ஏமாற்றம் தராது”

தமிழ் மொழிபெயர்ப்பு
அருட்பணி . எமர்சன் றாகல்

ஒவ்வொரு திருத்தூதர்களும் சோதனைகள், இடர்கள், புரிந்துகொள்ளாத் தன்மை மற்றும் துன்புறுத்தல்களின் மத்தியில் நற்செய்திப் பணியில் தம் வாழ்வை அர்ப்பணித்திருந்தனர். (2 கொ 6: 3-10) எனினும் அந்த சூழ்நிலைகளில் கூட இவ்வகை இருளிற்கு அப்பால் ஒரு ஒளியைக் கண்டனர். கிறிஸ்துவின் சிலுவையிலிருந்து வெளிப்பட்ட வல்லமையினால் நற்செய்திப் பணியில் அவர்கள் நிலைத்திருந்தார்கள். இதனடிப்படையில் எதிர்நோக்குடன் நெருங்கிய தொடர்புடைய 'பொறுமை' எனும் நற்குணப்பண்பை நாம் பயிற்சி செய்யக் கற்றுக்கொள்கின்றோம். வேகமாக இயங்குகின்ற இவ்வுலகில் விரும்புகின்றவற்றை விரைவாக பெற்றுக்கொள்ள முயல்கின்றோம். எல்லோருடனும் இணைந்து பொறுமையாக காத்திருந்து பெற்றுக்கொள்ள கடினமானதாகவே உள்ளது. இதனால் வீணான பதட்டம் வன்முறை, பொறுமையின்மை போன்றவற்றுக்கு வழிவகுக்கும். இதன் விளைவாக மகிழ்ச்சியற்ற தன்மையும் சுயநலமும் ஏற்படுகின்றது.

நவீன இலத்திரனியல் உலகில் இணையவழி அறிவை பெறும் நமக்கு எல்லாம் தற்போது கிடைக்கவேண்டும் என்கின்ற எண்ணத்தினால் பொறுமையை இழந்துவிடுகின்றோம். எம் உலகை வியப்புக்குரிய முறையில் சிந்தித்தால் நாம் பொறுமையின் முக்கியத்துவத்தை நன்கு புரிந்து கொள்ளலாம். இயற்கையின் எழிலையும் மாற்றங்களையும் நாம் வியந்து நோக்கி புனித பிரான்சிஸ் அசிசியின் பார்வையின் தெளிவை அனுபவிக்க முடியும். 800 வருடங்களுக்கு முன்னரே அவர் படைப்பை தம் குடும்பமாக எண்ணி வியந்து சூரியனை சகோதரன் எனவும் சந்திரனை சகோதரி எனவும் அழைத்து புதிய பார்வையில் வழிநடத்தினார். பொறுமையின் மதிப்பைப் புதுப்பித்துக்கொள்வதால் நமக்கும் பிறருக்கும் அது பயனுள்ளதாக இருக்கும். புனித பவுல் இப்பின்னணியில் பொறுமையைப் பற்றி அடிக்கடி தெளிவுபடுத்துவது எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனே நீடிய பொறுமையுள்ளவன் என எடுத்துக்காட்டுகின்றார். (உரோ 15:5) தூய ஆவியின் திருக்கனிகளில் ஒன்றான 'பொறுமை' எமது எதிர்நோக்கை உறுதிப்படுத்தி அதை ஒரு நற்பண்பாகவும் வாழ்க்கைமுறையாகவும் பலப்படுத்துகின்றது. எதிர்நோக்கின் அடித்தளமாக திகழும் பொறுமையின் அருள் பெற்றுக்கொள்ள நாம் செபிக்கக் கற்றுக்கொள்வோம்.

**2. எதிர்நோக்கின் திருப்பயணம்**

எதிர்நோக்கு மற்றும் பொறுமையின் இந்த தொடர்பு கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு திருப்பயணம் என்பதை தெளிவாகக் காட்டுகின்றது. என்றென்றும் நிலையான துணையாக எதிர்நோக்கை ஊக்கப்படுத்தவும் நிலைநிறுத்தவும் இத்திருப்பயணம் தருணங்களை ஏற்படுத்துகின்றன. அதன் மூலம் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை எதிர்கொள்ளும் இலக்கை நோக்கி நாம் அடியெடுத்து வைக்கின்றோம். இத்தருணத்தில் வரலாற்றில் கொண்டாடப்பட்ட முதல் யூபிலியை நினைவுகூர விரும்புகின்றேன். கி.பி. 1300 ஆம் ஆண்டு திருத்தந்தை 5ஆம் செபஸ்டின் அவர்கள் யூபிலியை கொண்டாடும் முறையை அறிமுகப்படுத்தினார். இதற்கு முன்னரே 1294 ஆம் ஆகஸ்ட் மாதம் 28ஆம் 29ஆம் தினங்களில் அக்கில்லா நகர் புனித மரியா டீ கொல்வெமஞ்சியோ பசிலிக்காவுக்கு (Basilica of Santa Maria di Collemaggio in Aquila) வருகைதந்தவர்கள் இறைவனின் மன்னிப்பை அனுபவிக்க திருத்தந்தை பொனிபெஸ் அவர்கள் புனித ஆண்டை அறிமுகம் செய்திருந்தார். இதேபோன்று 1216 ஆண்டில் திருத்தந்தை 3ஆம் கொனோரியஸ் அவர்கள் புனித பிரான்சிஸ் அசிசியின் வேண்டுகோளிற்கு அமைய போர்சியுஸ்கோலா (Porziuncola) ஆலயத்திற்கு வருகை தந்த யாத்திரிகளுக்கு பாவமன்னிப்பு அருள்பலன் கொடுக்கப்பட்டது. அவ்வாறே 1222இல் திருத்தந்தை 2ஆம் கலிசிஸ்டஸ் சந்தியாகோ டி கொம்பெஸ்டல்லா (Santiago de Compostella) ஆலயத்திற்கு புனித யாக்கோபுவின் விழாவை கொண்டாட வந்த இறை பக்தர்களுக்கும் யூபிலியை கொண்டாட அனுமதி அளித்தார். இவ்வாறாக திருஅவையானது யூபிலி ஆண்டில் இறைவனின் அருளை பல்வேறு வகைகளில் அடைந்திருக்கின்றது.

திருப்பயணம் (யாத்திரை) ஒவ்வொரு யூபிலி ஆண்டினுடைய அடிப்படை அங்கமாகும். ஒவ்வொரு பயணமும் வாழ்க்கையின் அர்த்தத்திற்கான எம் தேடலுடன் தொடர்புடையது. பாத யாத்திரை அமைதி, நம் கடின முயற்சி மற்றும் எளிமை ஆகியவற்றை கண்டறிவதற்கான ஒரு வழியாகும். யூபிலி ஆண்டில் 'எதிர்நோக்கின் திருப்பயணிகள்' இதனை முழுமையாக கண்டுகொள்வார்கள் என நம்புகின்றேன். எல்லைகளை பொருட்படுத்தாது ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கும், ஒரு நகரிலிருந்து மற்றொரு நகருக்கும் பயணம் செய்யும் போது நாம் வெவ்வேறு அனுபவங்களையும், பண்பாடு கலாசாரத்தையும், படைப்பின் அழகை பற்றியும் கற்றுக் கொள்கின்றோம். இறைவனுக்கு அவற்றிற்காக நாம் நன்றி கூறுகின்றோம். யாத்திரை இடங்கள் எதிர்நோக்கின் ஊற்றை பிறப்பிக்கின்றன. ஆன்மீகத்தை புதுப்பிக்கின்றன. இறைவனின் இரக்கத்தை அருளடையாளத்தின் மூலம் பொழிகின்ற நம்பிக்கையின் ஓய்வு இடங்களாக திகழும். இதன்போது ஒப்புரவு அருளடையாளத்தை கொண்டாடுவதற்கான வாய்ப்புக்கள் இறைமக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

2025ஆம் இப் புனித ஆண்டானது முன்னைய அருளின் கொண்டாட்டங்களின் தொடர்ச்சியாக திகழ்கின்றது. கடந்த சாதாரண யூபிலி ஆண்டில் (Ordinary Jubilee) நாம் இயேசுவின் பிறப்பின் 2000 வருட நினைவை கொண்டாடினோம். பின்னர் 2015 மார்ச் 13ஆம் திகதி அன்று இறைவனின் இரக்கத்தின் முகத்தை அறிந்து அதன்மூலம் மனிதருக்கு இறைவனை நேரடியாக சந்திக்க ஊக்குவிக்கும் பொருட்டு ஒரு சிறந்த யூபிலியை அறிவித்தேன். இப்பொழுது புதிய யூபிலிக்கான நேரம் வந்துவிட்டது. இதுவே புனித வாயிலை மீண்டும் திறந்து இறைவனின் அதித அன்பை அனைவரும் அனுபவிக்க அழைக்கின்றது. அவ் அனுபவம் நம் உள்ளங்களில் உறுதியான எதிர்நோக்கை தோற்றுவிக்கும். அது எம் மீட்பின் எதிர்நோக்காகும்.

இப்புனித ஆண்டானது நம்மை மற்றுமொரு உன்னதமான கொண்டாட்டத்திற்கு ஆயத்தமாக்குகின்றது. 2033ஆம் ஆண்டில் ஆண்டவரின் பாடுகள், மரணம், உயிர்ப்பினால் உரிமையான மீட்பின் 2000 ஆண்டு நிறைவை நோக்கி நாம் ஆயத்தமாகுவோம். எனவே, இத்தகைய முக்கிய நிகழ்வுகளை உள்ளடக்கிய திருப்பயணத்தினை ஆரம்பிக்கவுள்ளோம். இப்பயணம் இறைவனின் அருள் மக்களை வழிநடத்தி நம்பிக்கையில் உறுதி பெற்று இரக்க செயல்களில் செயல்பட்டு எதிர்நோக்கில் நிலைத்திருக்க உதவும்.

அதனடிப்படையில் புனித பேதுரு பசிலிக்காவில் டிசெம்பர் 24ஆம் திகதி புனித வாயில் திறக்கப்பட்டு யூபிலி ஆண்டு ஆரம்பித்து வைக்கப்படும். அதன் பின்னர் டிசெம்பர் 29ஆம் திகதி 1700வது நேர்ந்தளிப்பின் நிறைவினை கொண்டாடும் புனித யோவான் இலாத்தரன் பெருங்கோவிலின் புனித வாயிலும், ஜனவரி 1ஆம் திகதி அன்னையின் பெருவிழாவின் போது திருத்தந்தையின் பெருங்கோவிலான மரியாளின் பெருங்கோவில் புனித வாயிலும், இறுதியாக ஜனவரி 5ஆம் திகதி புனித பவுல் பெருங்கோவிலின் புனித வாயிலும் திறந்து வைக்கப்படும். இதனடிப்படையில் அனைத்து மறைமாவட்டங்களின் பேராலயத்தில் புனித வாயில்கள் டிசெம்பர் 29ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டு யூபிலி ஆண்டை பிரகடனப்படுத்துமாறு பரிந்துரைக்கின்றேன். இவ்வாயில்களினூடாக இறைமக்கள் பயணம் செய்து தகுதியான முறையில் அருட்சாதன கொண்டாட்டங்களில் பங்குபற்றும் போது பாவமன்னிப்பு அருள் பலன்களை பெற்றுக்கொள்ளும் ஒரு வாய்ப்பை பெற்றுக் கொள்வர்.

**3. எதிர்நோக்கின் அறிகுறிகள்**

இறைவனின் அருளில் எதிர்நோக்கு உள்ளவர்களாக திகழ காலத்தின் அறிகுறிகளினூடாக இறைவன் காட்டுகின்ற எதிர்நோக்கை கண்டுணர அழைக்கப் படுகின்றோம். இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு 'இன்றைய உலகின் திருஅவை' எண் 4 இல் “கிறிஸ்துவின் பணியைச் செயற்படுத்துவதற்குக் காலத்தில் குறிகளைத் துலாவி அறிந்து, நற்செய்தியின் ஒளியில் அவற்றின் பொருளை எல்லாக் காலகட்டங்களிலும் விளக்கி உரைப்பது திருஅவையின் கடமையாகும். இவ்வாறு இக்கால வாழ்வு மற்றும் வரவிருக்கும் வாழ்வு ஆகியவற்றின் பொருள் பற்றியும் இவை இரண்டிற்கும் இடையே உள்ள தொடர்பு குறித்தும் மக்கள் என்றும் எழுப்பும் கேள்விகளுக்கு திருஅவையால் ஒவ்வொரு தலைமுறைக்கும் அதற்கு ஏற்ற முறையில் விடையளிக்க முடியும். எனவே, நாம் வாழும் உலகையும் அதன் எதிர்பார்ப்புகளையும் ஏக்கங்களையும் பன்முறையும் உயிர்த்துடிப்புடன் வெளிப்படும் அதன் இயல்புப் பண்பையும் நாம் அறிந்து உணர வேண்டும். நாம் நமது உலகில் உள்ள நன்மைத்தனங்களை அறிந்து கொள்வது அவசியமானதாகும். இல்லையெனில் தீமை மற்றும் வன்முறையால் நாம் தடுமாறும் நிலைக்கு சென்றுவிடலாம். காலத்தின் அறிகுறிகள் குறிப்பாக இறைவனின் மீட்பை தேடுகின்ற மனித இதயங்களின் ஆவலாக எதிர்நோக்கின் அறிகுறிகளாக மாறவேண்டும்.

தொடரும்...

# திருத்தந்தை பிரான்சிஸ் ஓர் பார்வை



திருத்தந்தையின் இயற்பெயர் ஜார்ஜ் மரியோ பெர்கோக்லியோ. இவர் தென் அமெரிக்க நாடான அர்ஜென்டினாவில் உள்ள பெயோனஸ் ஏரஸ் என்னும் சிறு நகரத்தில் 1936ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் திகதி மரியா ஜோஸ் பிரான்சிஸ்கோ – ரெஜினா சிவோரி தம்பதியினருக்கு மூத்த மகனாக ஓர் எளிய குடும்பத்தில் பிறந்தார்.

திருத்தந்தை பிரான்சிஸ் தம் இளமையில் அரசு பள்ளியில் கல்விபயின்றார். இவருக்கு 21 வயது இருக்கும் போது அவருக்கு கடுமையான நிமோனியா தாக்குதல் ஏற்பட்டிருப்பதை மருத்துவர்கள் கண்டறிந்தனர். நுரையிரலின் வலது பிரிவில் மூன்று கட்டிகளைக் கண்டுபிடித்து அதனை அறுவைச் சிகிச்சையின் மூலம் அகற்றினர். பின் அவர் ஒரு நுரையீரலின் செயல்பாட்டையும் இழந்தார். 1958ஆம் ஆண்டு இயேசுசபை குருமடத்திற்கு அடியெடுத்து வைத்தார். தனது படிப்பை முடித்துவிட்டு 1963இல் நாடு திரும்பி மெய்யியலில் இளங்கலைப்பட்டம் பெற்றார். 1969 டிசம்பர் மாதம் 13ஆம் நாள் புனித ஜோசப் குருமடத்தில் இறையியல் படித்துக் கொண்டிருக்கும் போது குருவாக திருப்பொழிவு செய்யப்பட்டார். எல்லா துறவிகளுமே செபவாழ்வில் திளைத்திருக்க வேண்டும் என்பது திருஅவையின் அவா. குருவான பெர்கோக்லியோ தனது அன்றாட வேலைகளைத் தொடங்குவதற்கு முன்பு குறைந்த பட்சம் இரண்டு மனிநேரம் நற்கருணைஆண்டவர் சந்நிதியில் செபிப்பாராம். நற்கருணைமீது ஆழ்ந்த பக்தியும் திருப்பலி மீது தீராத தாகமும் கொண்ட சிறந்த ஆன்மீகவாதியாக அவர் விளங்கினார்.

திருத்தந்தை அவர்கள் 1992அம் ஆண்டு மே மாதம் 20ஆம் திகதி திருத்தந்தை இரண்டாம் யோவானால் துணை ஆயராக கர்தினால் அன்டோனியோ குவார்சினோவின் கீழ் பணிபுரிய நியமித்தார். அவர் மே மாதம் 27ஆம் திகதி ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பின் 1998 பெப்ரவரி 28ஆம் திகதி ஜார்ஜ் மரியோ பேராயராகவும் அர்ஜென்டினாவின் முதன்மையாளராகவும் இறைமக்களுக்கு நடுவராகவும் நியமிக்கப்பட்டார். ஏழைகளின் பிரியமுள்ள ஆயராகவும் ஏழைகளோடு பல மணிநேரம் செலவு செய்தார். எந்த அளவுக்கு எனில் அவர் “சேரிகளின் ஆயர்” என்றே அழைக்கப்படலானார். அவரிடம் இருந்த ஒரே ஆடம்பரம் அவரது நூலகம் தான்.

ஆர்ஜென்டினியாவின் பேராயராக நியமிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, பெப்ரவரி 21ஆம் 2001ஆம் ஆண்டு நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் பெர்கோலியோவை கர்தினாலாக நியமனம் செய்தார். கர்தினாலுக்குரிய நியமன திருச்சடங்குகள் நடைபெறும் போது தங்கள் குடும்பத்தினரும் நண்பர்களும் உரோமைக்கு பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டார். அவர்களிடம் அதற்கு மாறாக, அப்பயணத்திற்கு செலவிடும் தொகையில் ஏழை எளிய மக்களுக்கு உதவும்படி வேண்டுகோள் விடுத்தார்.

2013ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் திகதி திருத்தந்தை பதினாறாம் பெனடிக் அதிர்ச்சியான ஒரு செய்தியை அறிவித்தார். உடல்நிலைக்குறைவு காரணமாக 2013.02.28 தாம் திருத்தந்தைப் பணியைத் துறக்கப்போவதாக அவர் செய்தி வெளியிட்டார். அந்த அதிர்ச்சியான அறிவிப்பைத் தொடர்ந்து புதிய திருத்தந்தையைத் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 2013 மார்ச் 12ஆம் நாள் வத்திக்கான் சிஸ்டைன் சிற்றாலயத்தில் 115 கர்தினால்மார் புதிய திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்க வாக்குகள் அளித்தார்கள். அடுத்த நாள் 13ஆம் திகதி கர்தினால் ஜார்ஜ் மரியோ பெர்கோக்லியோ புதிய திருத்தந்தையாகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். இவர் பிரான்சிஸ் என்பதை தனது ஆட்சிப் பெயராகத் தெரிவு செய்தார்.

திருத்தந்தை அவர்கள் தனது 88 வயதில் 21.04.2025 அன்று இறைவனடி சேர்ந்தார். இவரது இறுதிச்சடங்கு 26.04.2025 அன்று அவரது விருப்பப்படி வாடிகானுக்கு வெளியே ரோம் நகரில் உள்ள செயின்ட் மேரி மேஜர் பசிலிக்கா தேவாலயத்தில் நடைபெற்றது.


## திருஅவையின் புதிய திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

திருஅவையின் 267 ஆவது திருத்தந்தையாக ராபர்ட் பிரான்சிஸ் ப்ரவோஸ்ட் அவர்கள் தேர்தெடுக்கப்பட்டார். இவர் அகுஸ்தீன் சபையைச் சேர்ந்த முதல் திருத்தந்தையாவார். இவர் பதினான்காம் லியோ என்னும் பெயரினை தனது ஆட்சிப் பெயராகத் தெரிவு செய்தார். மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்குப் பின் திருஅவையை பொறுப்பேற்கும் அமெரிக்க கண்டத்தைச் சேர்ந்த இரண்டாவது திருத்தந்தையாவார்.

திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் 1955 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் திகதி சிகாகோவில் உள்ள இல்லினோய்ஸ் என்னுமிடத்தில் பிறந்தார். அவரது தந்தை லூயிஸ் மாரியஸ் பிரீவோஸ்ட் தாயார் மில்ட்ரெட் மார்டினெஸ் ஆவார்கள். இவருக்கு இரண்டு சகோதரர்கள் உள்ளனர்.

தனது குழந்தைப் பருவத்தையும், இளமைப் பருவத்தையும் அமெரிக்காவில் கழித்த திருத்தந்தை அவர்கள் அகுஸ்தீன் சபையில் இளங்குருமடத்தில் கல்வி கற்றார். பின் பென்சில்வேனியாவில் உள்ள வில்லானோவா பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றார். 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் 1ஆம் நாள் சிகாகோவில் உள்ள செயிண்ட் லூயிஸில் உள்ள அகுஸ்தீன் துறவற இல்லத்தில் இணைந்து துறவறப் பயிற்சி பெற்றார். 1978ஆம் ஆண்டு செப்டம்பர் 2 தனது முதல் வார்த்தைப்பாட்டினையும் 1981 ஆம் ஆண்டு தனது நிரந்த வார்த்தைப்பாட்டினையும் அளித்தார். 1982 ஆம் ஆண்டு யூன் 19ஆம் நாள் பேராயர் ஜீன் ஜாடோட் அவர்களால் குருத்துவ அருட்பொழிவு செய்யப்பட்டார்.

2014 ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் நாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் பெருவின் சிக்லாயோ மறைமாவட்ட அப்போஸ்தலிக்க நிர்வாகியாகவும், பட்டம்சார் அயராகவும் நியமிக்கப்பட்டார். அதே ஆண்டு டிசம்பர் 12ஆம் நாள் குவாடலூப்பே அன்னை விழாவன்று அன்னை மரியா பேராலயத்தின் ஆயராகவும் நியமிக்கப்பட்டார். 08.05.2025



அன்று திருஅவையின் புதிய திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின் பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

# கத்தோலிக்க திருஅவையில் புதிய திருத்தந்தையை தெரிவு செய்யும் பாரம்பரிய முறை!

## திருத்தந்தையின் மறைவின் பின்னர் என்ன நடைபெறும்

திருத்தந்தை ஒருவரின் மறைவு என்பது பாரம்பரியமாக ஒரு சிக்கலான நடைமுறையாக காணப்படுகின்றது. ஆனால் பரிசுத்த திருத்தந்தை பிரான்சிஸ் இது தொடர்பான முழு நடைமுறையையும் சிக்கலற்றதாக மாற்றும் திட்டங்களிற்கு ஒப்புதல் அளித்தார்.

திருஅவையின் பொருளாளராகப் பணியாற்றும் கர்தினால் கேமர்லெங்கோ முதலில் போப்பின் மரணத்தை சரிபார்க்கும் பணியை மேற்கொள்கிறார். அவர் சம்பிரதாயபூர்வமாக திருத்தந்தையின் ஞானஸ்நானப் பெயரை 3 முறை அழைப்பார். அவர் பதிலைப் பெறவில்லை என்றால் திருத்தந்தை இறந்துவிட்டதாக அறிவிப்பார்.

இதற்குப் பிறகு திருத்தந்தையின் ஆட்சி முத்திரையைத் தாங்கிய மோதிரம் அதன் முடிவைக் குறிக்கும் வகையில் உடைக்கப்படும். திருத்தந்தையின் குடியிருப்பும் பூட்டி சீல் வைக்கப்படும். இந்த செய்தியை ஊடகங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு முன்பு திருத்தந்தை காலமானதைக் கமெர்லெங்கோ கர்தினால்கள் கல்லூரிக்கு அறிவிப்பார்.

## புதிய திருத்தந்தை தெரிவு செய்யப்படும் முறை

புதிய திருத்தந்தையை கத்தோலிக்க திருஅவையின் மூத்த அதிகாரிகளான கர்தினால்மார்களே தெரிவுசெய்வார்கள். இவர்கள் அனைவரும் திருத்தந்தையினால் நேரடியாக நியமிக்கப்பட்டவர்கள். தற்போது 252 (2025) கத்தோலிக்க கர்தினால்கள் உள்ளனர்.

இவர்களில் 138 பேர் புதிய திருத்தந்தையை தெரிவு செய்வதற்கு வாக்களிப்பதற்கு தகுதி பெற்றவர்கள். ஏனையவர்கள் 80 வயதிற்கு மேற்பட்டவர்கள் இதன் காரணமாக அவர்களால் திருத்தந்தை தேர்வில் பங்கெடுக்க முடியாது. எனினும் யாரை தெரிவு செய்ய வேண்டும் என்ற விவாதத்தில் அவர்கள் கலந்து கொள்ளலாம்.

## திருத்தந்தையை தெரிவு செய்யும் மாநாடு என்பது என்ன?

பணியில் உள்ள பரிசுத்த திருத்தந்தை மறைந்தால் (அல்லது வழமைக்கு மாறான விதத்தில் பாப்பரசர் பெனெடிக்ட் போன்று பதவியை இராஜினாமா செய்தால் கடந்த 600 ஆண்டுகளில் ஒரே ஒரு போப் மட்டும் தான் பதவியை இராஜினாமா செய்துள்ளார்) கர்தினால்கள் வத்திக்கானிற்கு ஒரு கூட்டத்திற்கு வருமாறு அழைக்கப்படுவார்கள். அதன் பின்னர் தேர்தல் என தெரிவிக்கப்படும் மாநாடு இடம்பெறும். சிஸ்டைன் தேவாலயத்திற்குள் இந்த தேர்தல் மிகவும் இரகசியமான முறையில் இடம்பெறும்.

ஒவ்வொரு வாக்குச்சீட்டின் முடிவும் சத்தமாக எண்ணப்பட்டு, பதிவாளர்களாக நியமிக்கப்பட்ட மூன்று கர்தினால்களால் பதிவு செய்யப்படுகிறது. யாருக்கும் தேவையான மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் கிடைக்கவில்லை என்றால் வாக்குச்சீட்டுகள் தேவாலயத்திற்கு அருகிலுள்ள ஒரு அடுப்பில் கரும்புகையை உருவாக்க இரசாயனங்களின் கலவையுடன் எரிக்கப்படுகின்றன.

மொத்த வாக்குகளில் மூன்றில் இரண்டை ஒரு கர்தினால் பெறும் வரை செய்முறை மீண்டும் மீண்டும் தொடர்கிறது. செயல்முறை முடிந்ததும், சிஸ்டைன் தேவாலயத்தின் கூரையில் உள்ள புகைபோக்கியில் இருந்து வெள்ளை புகை எழும்பும். இது கர்தினால்கள் ஒரு புதிய போப்பைத் தேர்ந்தெடுத்ததற்கான அறிகுறியாகும்.

மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஒரு வேட்பாளர் தேர்ந் தெடுக்கப்பட்டவுடன், அவர் முடிவை ஏற்றுக்கொள்கிறாரா என்று டீன் அவரிடம் கேட்பார். அவருக்கு ஒரு பெயரைத் தேர்ந்தெடுப்பார். திருத்தந்தையர்கள் பாரம்பரியமாக ஒரு துறவி அல்லது முன்னோடியை மதிக்கும் பெயர்களைத் தேர்தெடுப்பர்.

செயின் பீட்டர்ஸ் பசிலிக்காவின் பிரதான பால்கனியில் கர்தினால்கள் கல்லூரியின் பிரதிநிதி ஒருவர் நின்று "ஹபேமஸ் பாபம்" (இலத்தீன் மொழியில் நமக்கு போப் இருக்கிறார்) என்று அங்கு திரண்டிருக்கும் விசுவாசிகளுக்கு அறிவிப்பார். புதிய திருத்தந்தை வெள்ளை நிற கவசம் அணிந்து பால்கனியில் இருந்து பொதுமக்களுக்கு தனது முதல் உரையை வழங்குவார்.

# மறை அறிவோமா?

## புனிதர்கள் என்பவர்கள் யார்?

**ஒரு புனிதரின் திருநாள் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?**
பொதுவாக ஒரு புனிதரின் திருநாள் அவரின் இறந்த நாளாக தான் இருக்கும். இறந்த நாள் தெரியாத போதும், ஒரே நாளில் பல புனிதர்களின் இறந்த நாள் இருப்பினும், வேறு சில தனிச்சிறப்பான காரணங்களாலும் வேறு நாட்களில் திருநாள் நிர்ணயிக்கப்படுகிறது.

**ஏன் ஒரு புனிதரின் திருநாள் அவரது இறப்பு நாளன்று கொண்டாடப்படுகிறது?**
ஒருவரின் இறப்பு அவரின் நித்திய விண்ணக வாழ்விற்கு நுழைவாயிலாய் இருப்பதால், ஒரு புனிதரின் திருநாள் அவரது இறப்பு நாளன்று கொண்டாடப்படுகிறது.

பொதுவாக ஒரு புனிதரின் இறந்த நாளை கொண்டாடும் திருஅவை, மூன்று நபர்களின் பிறப்பை கொண்டாடுகிறது, யார் அவர்கள்?

- இயேசு கிறிஸ்து - கடவுள், நம் மீட்பர்
- அன்னை மரியாள் - சென்ம பாவம் இல்லாமல் பிறந்ததால்
- திருமுழுக்கு யோவான் - கருவிலே தூய ஆவியாரால் தூய்மை அடைந்ததால்

**கத்தோலிக்க திருஅவையில் ஏன் புனிதர் பட்டம் கொடுக்கப்படுகிறது?**
ஒரு எடுத்துக்காட்டான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்தவர்களுக்கு கத்தோலிக்க திருஅவையில் புனிதர் பட்டம் கொடுக்கப்படுகிறது. கிறிஸ்தவ விசுவாசத்திற்காக உயிர் நீத்தவர்கள், துன்பப்பட்டவர்கள், விசுவாசத்தை பாதுகாத்தவர்கள், விசுவாசத்திற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர்கள், கத்தோலிக்க கோட்பாடுகளை சிறப்பாக பின்பற்றியவர்கள், கத்தோலிக்க கோட்பாடுகளுடன் தொண்டு செய்தவர்கள் போன்றவர்களுக்கு புனிதர் பட்டம் கொடுக்கப்படுகிறது.

**புனிதர் பட்டம் வழங்கப்படுவதற்கு முன் உள்ள நிலைகள் என்ன?**
ஒருவர் இறந்த பின் பொதுவாக ஐந்து ஆண்டுகள் கழித்து தான் அவருக்கு புனிதர் பட்டம் வழங்குவது தொடர்பான வேலைகளை ஆரம்பிக்கலாம். திருத்தந்தை ஒப்புதல் அளித்தால் ஐந்து வருடத்திற்குள்ளாகவே அவருக்கு புனிதர் பட்டம் வழங்குவது தொடர்பான வேலைகளை ஆரம்பிக்கலாம்.

- இறைஊழியர்
- வணக்கத்திற்குரியவர்
- முத்திப்பேறு பெற்றவர்/ ஆசீர்வதிக்கப்பட்டவர்
- புனிதர்

**இறை ஊழியர் என்பவர் யார்?**
ஒருவர் வாழ்ந்த / மறைந்த ஊரின் மக்கள் / துறவியர் அவர்களின் ஆயரிடம் அவருக்கு புனிதர் பட்டம் வழங்க வேண்டும் என்று அவரை பற்றிய குறிப்புடன் கோரிக்கை வைக்கலாம். ஆயர் அந்த விண்ணப்பத்தை பரிசீலித்து புனிதர்களின் அலுவலுக்கான பேராலயத்திற்கு அனுப்பி வைப்பார். ஒருவருக்கு புனிதர் பட்டம் வழங்குவது தொடர்பான வேலைகளை ஆரம்பிக்கலாம் என்று ஒப்புதல் கிடைத்த பிறகு அவரை இறை ஊழியர் என்று அழைக்கலாம்.

**வணக்கத்திற்குரியவர் என்பவர் யார்?**
ஒரு இறை ஊழியர் தூய்மையான கத்தோலிக்க வாழ்க்கை வாழ்ந்தார் என்று திருத்தந்தை அங்கீகரித்தால் அவர் வணக்கத்திற்குரியவர் என்று அழைக்கப்படுவார்.

**முத்திப்பேறுபெற்றவர் / ஆசீர்வதிக்கப்பட்டவர் என்பவர் யார்?**
வணக்கத்திற்குரியவரின் பரிந்துரையால் புதுமை ஏதும் நடந்து அது திருஅவையால் கண்டு உணரப்பட்டால் அவர் முத்திப்பேறு பெற்றவர் / ஆசீர்வதிக்கப்பட்டவர் என்று அழைக்கப்படுவார். அவர் நிச்சயமாக விண்ணகத்தில் இருக்கிறார் என்றும் பரிந்து பேசும் வல்லமை பெற்றவர் என்றும் திருஅவையால் உறுதி செய்யப்படும். வணக்கத்திற்குரியவர் வேத சாட்சியாக (விசுவாசத்திற்காக உயிர் தியாகம் செய்தவர் / கொலை செய்யப்பட்டவர்) இருந்தால் புதுமை அவசியமில்லை. மாறாக அவர் விசுவாசத்திற்காக அல்லது பிறரின் நலனில் அக்கறை கொண்டு மனமுவந்து உயிர் துறந்தார் என்று திருத்தந்தையால் அறிவிக்கப்பட வேண்டும். இந்த அங்கீகாரம் வழங்குவதை அருளாளர் பட்டம் / முத்திப்பேறு பட்டம் என்று அழைக்கப்படுகிறது.

**புனிதர் என்பவர் யார்?**
ஆசீர்வதிக்கப்பட்டவரின் பரிந்துரையால் மேலும் ஒரு புதுமை நடந்து அது அங்கீகரிக்கப்பட்டால் அவர் புனிதர் என்று திருத்தந்தையால் திருப்பலியில் அறிவிக்கப்படுவார்.

## புனிதர்களின் பாதையில்



## புனித தேவசகாயம் பிள்ளை

மறைசாட்சியான புனித தேவசகாயம் பிள்ளை இந்தியாவின் இன்றைய குமரி மாவட்டத்திலுள்ள நட்டாலம் என்னும் கிராமத்தில் 1712ஆம் ஆண்டு ஏப்ரல் 23ஆம் நாளன்று நாயர் குலத்தில் பிறந்தார். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் நீலகண்டன் என்பதாகும். சிறுவயதிலேயே சமஸ்கிருதம், கலை ஆகியவற்றை படித்து அறிந்தார்.

இந்நிலையில் 1741இல் குளச்சல் துறைமுகத்தைப் பிடிக்க வந்த டச்சு படைகளின் தலைவரான டிலனாய் நீலகண்ட பிள்ளையின் நண்பரானார். ஒருநாள் நீலகண்ட பிள்ளை மிகுந்த கவலையில் இருப்பதைக் கண்ட டிலனாய் அதற்கான காரணத்தைக் கேட்டார். அதற்கு நீலகண்டன் தமது குடும்பத்திற்குச் சொந்தமான கால்நடைகள் இறந்து போவதும், பயிர்கள் நாசம் அடைவதும் தொடர்கதையாகி பொருளாதார ரீதியாகப் பெரும் இழப்பை சந்தித்து வருவதாக தெரிவித்தார்.

அப்போது திருவிவிலியத்தில் உள்ள யோபுவின் கதையை டிலனாய் சொல்லி, நீலகண்டனுக்கு கிறிஸ்தவ சமயத்தை அறிமுகம் செய்து வைத்தார். தொடர்ந்து இயேசுக் கிறிஸ்துவைப் பற்றி அவரிடம் கேட்டு தெரிந்துகொண்ட நீலகண்டன், நாளடைவில் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவராக மாறுவதற்கு விருப்பம் கொண்டார். திருநெல்வேலி மாவட்டத்தின் வடக்கன்குளம் கத்தோலிக்க தேவாலயத்தின் பங்குத்தந்தையாகப் பணிபுரிந்த ஜோவான்னி பத்தீஸ்தா புத்தாரி நீலகண்ட பிள்ளைக்குத் திருமுழுக்கு வழங்கி “இலாசர்” என்பதற்கு நிகரான “தேவசகாயம்” என்னும் பெயரைச் சூட்டினார். கத்தோலிக்க மதத்திற்கு மாறியதும் தேவசகாயம் பிள்ளை பலரிடமும் இயேசுக் கிறிஸ்துவைப் பற்றிப் போதித்து பலரை கிறிஸ்தவ மதத்திற்கு மனம் மாற்றினார். இவரது மனைவி திருமுழுக்கு பெற்று கத்தோலிக்கர் ஆனார்.

உயர் வகுப்பைச் சேர்ந்த இந்துக்கள் மக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவக்கூடாது என்ற அன்றைய திருவாங்கூர் அரச கட்டளையைச் சுட்டிக்காட்டி அவரை மீண்டும் இந்து மதத்தை ஏற்க வலியுறுத்தினர். அதைப் புறக்கணித்ததால் தேவசகாயம் மதம் மாறிய விவகாரம் மன்னரிடம் சென்றது. தமது மனதை மாற்றிக் கொள்ளுமாறு மன்னர் விடுத்த அழைப்பை தேவசகாயம் நிராகரித்தார். இதனால் ஆத்திரமடைந்த மன்னர் தேவசகாயத்தை சிறையில் அடைக்குமாறு ஆணையிட்டார்.

பல மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்ட பிறகும் தேவசகாயம் கிறிஸ்தவ நம்பிக்கையில் உறுதியாக இருந்தார். இதனால் நம்பிக்கை இழந்த மன்னர், கீழ்ப்படியாமையை அரசத் துரோகமாக கருதி அவருக்கு மரண தண்டனை விதித்தார்.

அவரைக் கொல்லும் முன் மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக அமையும்படி அவரை எருமை மாடு மீது அமர்த்தி பல ஊர்களுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லவும் ஆணையிட்டார். தேவசகாயம் சென்ற இடங்களில் எல்லாம் அவரிடம் ஆசி பெறச் சென்ற கிறிஸ்தவர்களுக்கு அற்புதங்கள் நிகழ்ந்ததாக கூறப்படுகின்றது. அவரைக் கட்டி வைத்திருந்த பட்டுப்போன வேப்பமரம் மீண்டும் தளிர்த்து வளர்ந்ததாகவும் வரலாறு கூறுகின்றது. 1752 ஜனவரி 14ஆம் திகதி ஆரல்வாய் மொழியில் உள்ள கற்றாடி மலையில் தேவசகாயம் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது உடலை காட்டிலேயே எரித்து விட்டுச் சென்றனர். சில நாட்களுக்குப் பின் இதை அறிந்த கிறிஸ்தவர்கள் அவரது உடலை எடுத்து கோட்டாறு புனித சவேரியார் ஆலய வளாகத்தில் அடக்கம் செய்தனர். புனித தேவசகாயம் பிள்ளைக்கு 15 மே 2022 அன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புனிதர் பட்டம் வழங்கப்பட்டது.

---

**ஜோ. நோமன் பல்தசார், ஓய்வு நிலை அதிபர்**



அன்பு மாணவ, மாணவியரே, வாசகநெஞ்சங்களே,

மடல் – 07

# மன்னித்தால் என்ன?

தவக்காலம் ஆரம்பமாகி உயிர்த்த ஞாயிறுடன் அது நிறைவு பெறுகின்றது. தவக்காலத்தில் நல்ல உயரிய பண்புகளைப் பெற்றிருப்பாய்.

மன்னிப்பு மனித வாழ்க்கையில் நிச்சயமாக கடைப்பிடிக்க வேண்டிய பண்பு. பிறரை மன்னிப்பது என்பது இலகுவானது அல்ல. பழி வாங்கும் உணர்வுடன் பவனிவரும் மனித இனம் ஒருவரை மன்னிக்க வேண்டும் என்ற உணர்வைப் பெறுவது கடினம்தான். நீ மாணவர் சிறிய வயதிலேயே பிறரை மன்னிக்க கற்றுக்கொள். இயேசு கற்றுத்தந்த செபத்தை நாம் தினமும் கூறுகின்றோம். அச்செபத்தில் “எங்களுக்கு தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பது போல்....” என்று தினமும் செபிக்கிறோம். இது மன்னிப்பு வேண்டல் இவ்வாறு வேண்டியும் பிறரை நாம் மன்னிக்க முடியவில்லையாயின் கிறிஸ்தவ வாழ்வில் அர்த்தமில்லை அல்லவா?

மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம் மாணிக்க கோயில்... என்று சினிமா பாடல் ஒன்றில் கேட்ட ஞாபகம். நீயும் கேட்டிருப்பாய் மன்னிப்போம் மறப்போம் அன்பை நாம் வளர்ப்போம்... மன்னிப்பு – மன்னிப்பு தாருமே இறைவா.... என்றெல்லாம் அடிக்கடி பாடுகிறோம். ஆனால் நாம் பிறரை மன்னிக்கா விட்டால் கிறிஸ்தவனாக இருப்பதில் அர்த்தம் என்ன?

பாடசாலை வாழ்க்கையில் பிற மாணவருடன் உறவாடும் உனக்கு, வகுப்பறையில் உனக்கு எதிராக சாட்சியம் கூறும் மாணவர், உனக்கு எதிராக கோள் கூறும் மாணவர், உன் புத்தகப் பையில் இருக்கும் பணத்தைத் திருடும் மாணவர் உன்னிடம் இருக்கும் சிறந்த புத்தகம் அல்லது அதுபோன்ற ஏதேனும் பொருளை திருடும் மாணவர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் அவர்களை திரும்பத் திரும்ப மன்னித்துக் கொள். எத்தனை தடவை மன்னிக்கும் படி இயேசு கூறியுள்ளார் என்பது உனக்குத் தெரியும் தானே, தெரியாவிட்டால் வேதாகமப் புத்தகத்தைப் புரட்டி மத்தேயு 18ஆம் அதிகாரம் 22ஆம் வசனத்தைப் படித்துப் பார்.

என்னதான் மன்னிக்கும் மனப்பக்குவம் உனக்கு ஏற்பட்டாலும் தவறு செய்பவர்கள் மீது உனக்கு கோபம் ஏற்படும். அந்த நேரம் கோபத்தினால் யாரையும் திட்டி விடாதே. அந்தத் தவறை மற்றவர் மனம் நோகாமல் சுட்டிக் காட்டத் தவறாதே.

ஒரு சிறு கதை படித்துப்பார். இந்தியாவில் தலைசிறந்த சுதந்திர போராட்ட வீரராக இருந்தவர் சக்கரவர்த்தி ராஜ கோபாலச்சாரியார். இவர் 1937ஆம் ஆண்டில் சென்னை மாகாணமாக இருந்த போது பிரதமராக இருந்தவர். அவர் தமது வேலைக்காரர் ஒருவரை அழைத்து தபாலில் சேர்க்க வேண்டிய கடித உறை ஒன்றைக் கொடுத்து அதிலே ஒரு முத்திரை ஒட்டிவரும்படி கூறினார்.

அந்த வேலைக்காரன் அதைப்பெற்றுக் கொண்டு போய் முத்திரையை ஒட்டிக்கொண்டு வந்தார். அந்த முத்திரை தலைகீழாக ஒட்டப்பட்டிருந்தது. இதைக் கவனித்த ராஜாவிற்கு சிரிப்புத்தான் வந்தது அந்த வேலைக்காரரிடம் சிரித்துக் கொண்டே கூறினார்.

“நாங்கள் எல்லாருமே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து பிரிட்டிஷ் சக்கரவர்த்தியை கவிழ்ப்பதற்கு எவ்வளவோ முயற்சி செய்து வருகிறோம். எங்களாலே இன்னும் முடியவில்லை நீயோ அதே காரியத்தை ஒரே நொடியில் செய்து விட்டாயே” என்றார். வேலைக்காரனுக்கு தன் தவறு புரிந்துவிட்டது. வேலைக்காரனிடம் கூட மரியாதை தவறாமல் அவன் மனம் புண்படாமல் பேசிய நாகரீகபாங்கு ஒவ்வொருவருக்கும் வரவேண்டும். தவறை சுட்டிக்காட்டு ஆனால் தவறு செய்தவரின் மனம் நீ சுட்டிக்காட்டுவதால் புண்பட்டுவிடக்கூடாது.

இவ்வாறான பழக்கத்தை நீ பெற்றுக்கொண்டால் எப்போதும் வாழ்க்கையில் வெற்றி பெறுவாய் என்பதை நம்பு. உனது வாழ்க்கையில் இப்படியொரு நம்பிக்கையை ஏற்படுத்தினால் எப்போதும் வெற்றிதான். நீயும் வாழ்க்கையில் நல்லதைச் செய்தால் நன்மையே நடக்கும் என்பதில் நம்பிக்கைவை. மன்னிப்பும், நம்பிக்கையும் உனக்கு வெற்றி தரும்.

உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல் நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள் - (லூக்கா 6:36)

## திருத்தூதர் பணிகள் 17 – 20 அதிகாரங்கள்

- எல்லோரும் பங்குபற்றலாம்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
- அதிர்ஸ்டசாலி குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுகள் முறையே 1ஆம் பரிசு 700/= 2ஆம் பரிசு 500/= 3ஆம் பரிசு 300/=

**சரி, பிழை எழுதுக.**

1. பொன், வெள்ளி, கல் உருவங்களைப் போலக் கடவுள் இருப்பார் என நாம் எண்ணுவது முறையானதே. ( )

2. உங்கள் அழிவுக்கு நீங்களே பொறுப்பு நான் அல்ல. இனிமேல் நான் பிற இனத்தாரிடம் செல்கிறேன் எனக்கூறியவர் பவுல் ஆவார். ( )

3. மறைநூல்களில் புலமை வாய்ந்த அப்பொல்லோ என்பவர் அலக்சாந்திரியாவில் பிறந்தார். ( )

4. பவுல் துரோவாவில் மூன்றாம் மாடியிலிருந்து கீழே விழுந்த இளைஞனை உயிர்த்தெழச் செய்தார். ( )

5. ஸ்கேவா எனும் யூதத் தலைவரின் உடலில் பட்ட கைக்குட்டைகளையும், துண்டுகளையும் நோயுற்றோர் மீது வைக்க நோய் நீங்கியது. ( )

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

6. யோவான் _________ மாறிய மக்களுக்குத் _________________ கொடுத்து, தமக்கு பின்வரும் ________________ நம்பிக்கை கொள்ளுமாறு கூறினார்.

7. உலகமெங்கும் ___________ உண்டாக்குகிற இவர்கள் இங்கேயும் வந்து விட்டார்கள். ____________ இவர்களைத் ______________ வரவேற்றிருக்கிறான்.

8. _________ நகர மக்களே நீங்கள் மிகுந்த ____________________________ என்பதை நான் காண்கிறேன்.

9. ________________ எனக்குத் தெரியும் ________________ எனக்குத் தெரியும் ஆனால் ________________ யார்?

10. என்னைப் ________________ வரையில் எனது ________________ ஒரு பொருட்டாக நான் ________________

### திருத்தூதர் பணிகள் 09 – 12 அதிகாரங்களில் பங்கு பற்றியோர் விபரம்

1. புனித லூர்து அன்னை திருத்தலம் (பாலையூற்று) - 36
2. புனித அந்தோனியார் ஆலயம் (மூதூர்) - 09
3. புனித வனத்து அந்தோனியார் ஆலயம் (செல்வநாயகபுரம்) - 07
4. இறைஇரக்க திருத்தலம் (அலஸ்தோட்டம்) - 07
5. புனித சதாசகாய அன்னை ஆலயம் (அன்புவழிபுரம்) - 07
6. புனித மரியாள் பேராலயம் (திருகோணமலை) - 03
7. புனித யூதாததேயு ஆலயம் (இலிங்கநகர்) - 03
8. புனித குவாடலூப்பே அன்னை திருத்தலம் (திருகோணமலை) - 03
9. புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் (சாம்பல்தீவு) - 02
10. புனித பாத்திமா அன்னை ஆலயம் (தம்பலகமம்) - 02
11. புனித சூசையப்பர் ஆலயம் (நிலாவெளி) - 02

பெயர் :......................................................................

முகவரி :......................................................................

தரம் :......................................................................

பங்கு :......................................................................

*முடிவுத்திகதி 2025.06.30*

## திருவிவிலிய புதிர் போட்டி – 64 எசாயா 44 – 47 அதிகாரங்கள்

- **எல்லோரும் பங்குபற்றலாம்**

1. தாகமுற்ற நிலத்தில் இதை ஊற்றுவேன் இத் தரையில் இதனை ஓடச் செய்வேன்.

விடை:.......................................................................................

2. தன் தேவைக்கென்று இந்த மரத்தை வெட்டிக்கொள்ளலாம், அல்லது அடர்ந்த காட்டில் வளர்ந்த இந்த மரங்களை தேர்ந்து கொள்ளலாம் அல்லது இந்த மரக்கன்றை நட்டு அது மழையினால் வளர்வதற்குக் காத்திருக்கலாம்.

விடை:.......................................................................................

3. நான் உனக்கு முன்னே சென்று இதனைச் சமப்படுத்துவேன். இந்தக் கதவுகளை உடைத்து இந்தத் தாழ்ப்பாள்களைத் தகர்ப்பேன்.

விடை:.......................................................................................

4. தந்தையிடமும், தாயிடமும் இப்படி வினவுபவனுக்கு ஐயோ கேடு?

விடை:.......................................................................................

5. இரை மேல் பாயும் இதனை இங்கிருந்து அழைக்கிறேன். என் திட்டத்தை செயல்படுத்தும் ஒருவனை இங்கிருந்து வரவழைக்கிறேன்.

விடை:.......................................................................................

6. மக்கள் பையைத் திறந்து இதனைக் கொட்டுகிறார்கள். இதில் வெள்ளியை நிறுத்துப் பார்க்கிறார்கள். இவனைக் கூலிக்கு அமர்த்துகிறார்கள்.

விடை:.......................................................................................

7. இதனைப் பிடித்து மாவரை. உன் இதனை அகற்றிவிடு உன் இதனையும் களைந்து விட்டு, உன் இது தெரிய இதனைக் கடப்பாய்.

விடை:.......................................................................................

8. அவர்கள் இது போன்றவர்கள். அது அவர்களைப் பொசுக்கி விடும் இதில் நின்று தம் உயிரைக் காத்துக் கொள்ள மாட்டார்கள்.

விடை:.......................................................................................

9. நான் இங்கும் மண்ணுலகின் இந்தப் பகுதியிலும் பேசியதில்லை. இங்கு என்னைத் தேடுங்கள் என்று நான் இந்த வழிமரபினரிடம் சொல்லவில்லை.

விடை:.......................................................................................

10. உன் குற்றங்களைக் இதைப் போலும் உன் பாவங்களைப் இதைப்போலும் அகற்றிவிட்டேன். என்னிடம் திரும்பி வா நான் உனக்கு மீட்பளித்துவிட்டேன்.

விடை:.......................................................................................

### பாராட்டுப் பெறுவோர் (எசாயா 35 – 39, புதிர் போட்டி 62)

1. கி. துவானிக்கா - புனித லூர்து அன்னை ஆலயம் பாலையூற்று
2. யோசப் மோட்சமேரி - சதாசகாய அன்னை ஆலயம் மூதூர்
3. கி. ஷெவின் - புனித லூர்து அன்னை திருத்தலம் பாலையூற்று
4. A.J. பிலிப் ஜோயல் - புனித லூர்து அன்னை திருத்தலம் பாலையூற்று
5. S.P. பிறையன் மரியோ - புனித லூர்து அன்னை திருத்தலம் பாலையூற்று
6. சுசேந்தினி சுரேஸ் - புனித லூர்து அன்னை திருத்தலம் பாலையூற்று
7. கி.து. ஜோயல் அட்றியோ - புனித லூர்து அன்னை திருத்தலம் பாலையூற்று
8. S. திருமகள் - புனித அந்தோனியார் ஆலயம் - மூதூர்
9. ஜெ. ஷெனுப் - புனித அந்தோனியார் ஆலயம் - மூதூர்
10. E. தேவதிஷான் - இறைஇரக்க திருத்தலம் - அலஸ்தோட்டம்

பெயர் :......................................................................

முகவரி :......................................................................

தரம் :......................................................................

பங்கு :......................................................................

*முடிவுத்திகதி 2025.06.30*

# சிறுவர்களுக்கான போட்டி

## படத்திலுள்ள 05 வித்தியாசங்களைக் கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்



படம் – 01



படம் – 02

- பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01 ற்கு மாத்திரம் நிறம்தீட்டி படம் 02 இல் உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- 1, 2, 3 ஆம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.
  1 ஆம் பரிசு - 700/- 2 ஆம் பரிசு - 500/- 3 ஆம் பரிசு - 300/-

பெயர் :.................................................................

முகவரி :.................................................................

தரம் :.................................................................

பங்கு :.................................................................

*முடிவுத்திகதி 2025.06.30*

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி - 48

### நீதிமொழிகள் அதிகாரம் 22 - 24 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ந | | | | | | | | | |
| | ஏ | | ■ | | | | | | வ |
| | | | ■ | அ | | | | | |
| | | | | | | | | | ம |
| | | | வீ | | | | | ■ | ■ |
| | | | ப | | | | | | |
| | ■ | க | | | | | | | நீ |
| ■ | | | | | | | | | சி |
| பு | | | | | | | | | |
| தூ | | | | | | | | | ■ |

1. பு___ழை ப்___று___ தே___ல்
2. ஏ___க___டு
3. தூ___உ___ள___தி___ர்
4. வ___சி___கா___
5. சி___மை___ப___த்___தே
6. அ___வூ___டு___
7. ம___ம___ழ்___சி
8. வீ___போ___து
9. களி___ர்___ர்
10. ப___ன___ப்___ர்
11. நீ___த்___ர்___பு
12. ந___மு___டா___ம்
13. ந___பே___ம்___டை___கு___

பெயர் :.................................................................

முகவரி :.................................................................

பங்கு :.................................................................

*முடிவுத்திகதி 2025.06.30*

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்

1 ஆம் பரிசு 700/= ரூபா
P. இனோ லெற்றிக்
இல. 38, அந்தோனியார் வீதி
பாலையூற்று
புனித லூர்து அன்னை திருத்தலம்.

2 ஆம் பரிசு 500/= ரூபா
ஜெ. ஷெமாயா
மின்சார நிலைய வீதி
மூதூர் – 07
புனித அந்தோனியார் ஆலயம்.





3 ஆம் பரிசு 300/= ரூபா
அன்ரன் ஜெயக்கிஷன் அபிலாஷினி
6ஆம் கட்டை, கப்பல்துறை
புனித பற்றிமா அன்னை ஆலயம்

## திருத்தூதர் பணிகள் அதிகாரங்கள் 09 – 12

1 ஆம் பரிசு 700/= ரூபா
S. டிரேஸ்மன்
இல. 216/26, சுடர் ஒளி வீதி
பாலையூற்று
புனித லூர்து அன்னை திருத்தலம்





2 ஆம் பரிசு 500/= ரூபா
யோசப் மோட்சமேரி
மூதூர் – 02
புனித சதாசகாய அன்னை ஆலயம்

3 ஆம் பரிசு 300/= ரூபா
J. பிரதிக்ஷா
இல. 246/4
அலஸ்தோட்டம்
இறைஇரக்க திருத்தலம்.

## திருவிவிலிய புதிர் போட்டி முடிவுகள் – 62
## எசாயா 35 – 39 அதிகாரங்கள்



1 ஆம் பரிசு 700/= ரூபா
இ. கனிஷ்யா
இல. 08, யோசப்வாஸ் வீதி
பாலையூற்று
புனித லூர்து அன்னை திருத்தலம்.



2 ஆம் பரிசு 500/= ரூபா
அருளானந்தம் தஸ்மிதன்
இல. 70/5, அந்தோனியார் வீதி
பாலையூற்று
புனித லூர்து அன்னை திருத்தலம்.

3 ஆம் பரிசு 300/= ரூபா
E. தேவதிஷான்
இல. 246/4
அலஸ்தோட்டம்
இறைஇரக்க திருத்தலம்.

# மறைக்கல்வி நடுநிலைய நிகழ்வுகள்

இவ்வருடம் மறையாசிரியர் பரீட்சை 1,2,3 எழுதவிருக்கு தமிழ் மற்றும் சிங்கள ஆசிரியர்களுக்கான கருத்தமர்வானது 08.03.2025 அன்று மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது. தமிழ் ஆசிரியர்களுக்கான கருத்தமர்வினை ஆசிரியை திருமதி. பிரசாந்தினி அவர்களும். சிங்கள ஆசிரியர்களுக்கான கருத்தமர்வினை அருட்சகோதரி. ஷானிக்கா அவர்களும் நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





மறையாசிரியர்களுக்கான ஆயர் சந்திப்பும், தவக்காலத்தியானமும் 22.03.2025 அன்று யூபிலி மண்டபத்தில் காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 2.00 மணிவரை நடைபெற்றது. இக்கருத்தமர்வில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கு மதிய உணவு மற்றும் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




திருகோணமலை மாவட்டத்தில் அரச பாடசாலையில் கற்பிக்கும் அனைத்து கிறிஸ்தவ ஆசிரியர்களுக்குமான கருத்தமர்வானது கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சித்திரை மாதம் 9ஆம், 10ஆம் திகதிகளில் புனித மரியாள் கல்லூரியில் நடைபெற்றது.



## “தொடரும் சிலுவைப் பயணங்கள்”

பங்குத்தந்தை அருட்பணி. றொஹான் பேணார்ட் அடிகளாரின் வழிநடத்தலின் கீழ் திருச்சிலுவைமலை ஆலயம், 6ஆம் கட்டை, சாம்பல்தீவு பங்குமக்களால் “**தொடரும் சிலுவைப் பயணங்கள்**” எனும் தலைப்பில் மேடை நாடகம் அரங்கேற்றப்பட்டது.





எதிர் நோக்கின் திருப்பயணிகள் என்னும் 2025 ஆம் ஜூபிலி ஆண்டில் குழந்தை இயேசு ஆலய மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் மறையாசிரியர்கள் இணைந்து 13.03.2025 அன்று திருகோணமலை மறைமாவட்டத்திலுள்ள திருத்தலங்களில் ஒன்றான திருகோணமலை புனித குவாடலூப்பே அன்னை திருத்தலத்திற்கு நடைபவனியாகச் சென்று மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் இணைந்து ஆன்மீக ரீதியான செயற்பாடுகளிலும், சிலுவைப் பாதையிலும், தவக்காலத்தியானத்திலும் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.





2025 ஆம் ஆண்டு யூபிலி ஆண்டை சிறப்பிக்கும் வகையில், திருக்குடும்ப சபையைச் சேர்ந்த எட்டு அருட்சகோதரிகள் இருதயபுரத்தில் உள்ள திரு இருதய ஆண்டவர் ஆலயத்தில் நான்கு நாட்கள் ஆன்மீக புதுப்பித்தல் தியானத்தை நடாத்தினார்கள். அவர்கள் ஒவ்வொரு குடும்பத்தையும் சந்தித்து தரவுகளை சேகரித்தனர். இத்தியானத்தின் இறுதி நாளில் பெற்றோர், இளையோர்கள் மற்றும் சிறார்களுக்கு கருத்தரங்குகளையும் நடாத்தினார்கள்.